# கிராமங்கள் தோறும் கழக அரசின் சாதனைகளை எடுத்துச்சொல்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

என்றால், திரும்பத் திரும்ப தலைவர் கலைஞரின் உழைப்பை, போராட்டத்தை, சாதனைகளைச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். குறிப்பாக, இளைய தலைமுறையிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். அதனால்தான் தலைமைக் கழகம், மாவட்டக் கழக நிர்வாகங்கள் மட்டுமின்றி கழகத்தின் சார்பு அணிகளுக்கும் பொறுப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

தலைமைக் கழகத்தால் அமைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு அதன் பல்வேறு பரிந்துரைகளை வழங்கியது. அடிப்படையில் பல்வேறு செயல்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். இது குறித்து முரசொலியில் உடன்பிறப்புகள் கடிதத்தில் விரிவாக எழுதியுள்ளேன்.

**துண்டுப்பிரசுரங்களாக வழங்க வேண்டும்!**

தமிழ்நாட்டில் உள்ள எந்த ஊராக இருந்தாலும் அதில் கலைஞர் ஆட்சியின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு இருக்கும். அவர் கொண்டு வந்த திட்டங்களால் பயன் பெற்றவர்கள் இருப்பார்கள். அதையெல்லாம் நீங்கள் கவனித்து, அந்தந்த ஊர் மக்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். காணொலிகளாக, துண்டுப் பிரசுரங்களாக வழங்க வேண்டும்.

> **எ**ல்லா இடத்திலும் எல்லோர் மனதிலும் முத்தமிழறிஞர் கலைஞரின் பன்முக ஆற்றலை, சாதனைகளை, அதனால் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சியை, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் பெற்ற நன்மைகளைக் கொண்டு சேர்க்க வேண்டியது நம்முடைய கடமை மட்டுமல்ல, நமது இனம் – மொழி வாழ அயராது பாடுபட்ட தலைவருக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடன். 2024 தேர்தலுக்கான அறிவிப்பு வருவதற்கு முன், இதனை முழுமையாக நிறைவேற்றிட வேண்டும்.

எல்லா இடத்திலும் எல்லோர் மனதிலும் முத்தமிழறிஞர் கலைஞரின் பன்முக ஆற்றலை, சாதனைகளை, அதனால் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சியை, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் பெற்ற நன்மைகளைக் கொண்டு சேர்க்க வேண்டியது நம்முடைய கடமை மட்டுமல்ல, நமது இனம் - மொழி வாழ அயராது பாடுபட்ட தலைவருக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடன். 2024 தேர்தலுக்கான அறிவிப்பு வருவதற்கு முன், இதனை முழுமையாக நிறைவேற்றிட வேண்டும்.

தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடும் இதே வேளையில்தான், வரும் ஆண்டு கழகத்தின் 75-ஆவது ஆண்டு விழாவையும் கொண்டாட இருக்கிறோம். எனவே, செப்டம்பர் 17-க்குப் பிறகு, இந்நிகழ்ச்சிகளில் பவள விழாவையும் சேர்த்தே கொண்டாடுங்கள். நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் முழுமையாக வென்று, 2024 ஜூன் -3 அன்று, நூற்றாண்டு நாயகர் கலைஞருக்கு அவர் பிறந்தநாளில் நாம் நன்றிக் காணிக்கை செலுத்துவோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; இந்திய ரூபாயின் மதிப்பில், இதுவரை இல்லாத சரிவு ஏற்பட்டு விட்டதாமே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; உண்மைதான்! அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிந்து, 1 டாலர் = 83.10 ரூபாய் என்ற நிலைக்கு வந்துவிட்டது.**

**இந்திய ரூபாய் இன்னும் எந்த அளவுக்குச் சரிந்து விடுமோ, யாரறிவார்!**

# உண்ணாவிரத அறப்போர் ... முதல் பக்கத் தொடர்ச்சி

கல்வி என்பது பொதுப்பட்டியலில் உள்ளது. ஒரு மாநில அரசால் நீட்டை ரத்து செய்ய என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ, அவை அனைத்தையும், முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

மே 2021-ல் கழக அரசு ஆட்சிக்கு வந்தவுடனே, ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையில் நீட் பாதகங்கள் குறித்து ஆராயச் சிறப்புக்குழு அமைக்கப்பட்டது.

**தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதா!**

இந்தக்குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில், கடந்த 2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கும் மசோதா தமிழ்நாடு சட்டமன்றத்தில் இயற்றப்பட்டது.

மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்தி வந்த ஆளுநரிடம், ஒப்புதல் வழங்கும்படி பல்வேறு தருணங்களில் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி வந்தார்கள்.

நீட் தேர்வுக்கு விலக்கு கேட்க வேண்டும் என்றும், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றக்கோரியும் அக்டோபர் 4, 2021 அன்று, 12 மாநில முதலமைச்சர்களுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்கள்.

கடந்த 2021-ஆம் ஆண்டு நவம்பர் 27-ஆம் தேதியன்று, முதலமைச்சர் அவர்கள் ஆளுநரை நேரில் சந்தித்து நீட் தேர்வுக்கு விலக்குக் கோரும் சட்டமன்ற மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கும்படி வலியுறுத்தினார்.

முதலமைச்சர் அவர்களின் தொடர் அழுத்தம் - பிற அரசியல் கட்சிகளின் அழுத்தம் - பொதுமக்கள் - மாணவர் இயக்கங்களின் போராட்டத்தின் காரணமாக 5 மாதங்களுக்குப் பிறகு பிப்ரவரி 2, 2022 அன்று நீட் விலக்கு மசோதாவினை ஆளுநர் ரவி சட்டப்பேரவைக்கே திருப்பி அனுப்பினார்.

மசோதாவை திருப்பி அனுப்பியது குறித்து, ஆலோசிப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் தலைமையில், பிப்ரவரி 5, 2022 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி மீண்டும் நீட் விலக்கு மசோதாவை நிறை வேற்ற முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் பிப்ரவரி 8, 2022 அன்று மீண்டும் நீட் விலக்கு மசோதா நிறைவேற்றப் பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இரண்டாவது முறையாக அனுப்பப்பட்ட நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வலியுறுத்தி, மார்ச் 15, 2022 அன்று முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு ஆளுநரை நேரில் சந்தித்து வலியுறுத்தினார்கள்.

**நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய ஆளுநர்!**

மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல், மீண்டும் காலம் தாழ்த்தி வந்த ஆளுநரை ஏப்ரல் 22, 2022 அன்று அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மா.சுப்பிர மணியன் அவர்கள், நேரில் சந்தித்து ஒப்புதல் வழங்க வலியுறுத்தினர். இதையடுத்து, நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்கு ஆளுநர் ரவி மே 5, 2022 அன்று அனுப்பி வைத்தார்.

இப்படி தமிழ்நாட்டுக்கு நீட் தேர்வில் இருந்து விலக்குப் பெற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் கழக அரசு ஒருபுறம் எடுத்து வருவதும், ஆளுநர் அதனைத் தடுத்து நிறுத்துவதும் தொடர்ந்து நடைபெறுகிறது.

நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும், நீட் பிரச்சினையை நம் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பி வருகின்றனர். பிரதமர் அவர்கள் தமிழ்நாடு வருகிற போதும், முதலமைச்சர் அவர்கள் டெல்லி செல்கிற போதும், பிரதமரிடம் வைக்கப்படும் முதல் கோரிக்கையே நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு கோருவதுதான்.

கழக இளைஞர் அணி செயலாளர் அவர்கள், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், பிரதமர் மோடி அவர்களை டெல்லியில் பிப்ரவரி 28, 2023 அன்று சந்தித்தார்கள். அப்போதுகூட, பிரதமர் அவர்களிடம், நீட் ஒழிப்பைத்தான் வலியுறுத்தினார்கள்.

இப்படித் தமிழ்நாடு அரசு எத்தனை முறை கோரிக்கை வைத்தாலும் ஒன்றிய பா.ஜ.க. அரசு அதனைப் பொருட்படுத்துவதே கிடையாது.

**‘நீட்’ என்பது நிரந்தரம் அல்ல! முதல்வர் நிச்சயம் அதை ஒழிப்பார்!**

இந்த நேரத்தில் மாணவச் செல்வங்களுக்கு நாங்கள் சொல்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான், நீட் தேர்வு என்பது நிரந்தரம் கிடையாது.

முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் நீட் தேர்வை ஒழிப்பார்கள். அதற்கான காலம் வெகுதொலைவில் இல்லை. எனவே, மாணவச் செல்வங்கள் தன்னம்பிக்கையுடனும் - மன உறுதியுடனும் பொறுமை காத்திருக்க வேண்டுகிறோம் என்று தெரிவித்திருந்தனர்.

எத்தனை மரணங்கள் நிகழ்ந்தாலும், நீட் தேர்வு நடக்கும் என்ற எதேச்சதிகாரப் போக்கில் உள்ள ஒன்றிய அரசையும் - இல்லாத அதிகாரம் இருப்பதுபோல் மாளிகையில் கொக்கரிக்கும் ஆளுநரையும் கண்டித்து, இந்த மாபெரும் உண்ணாவிரதம் தமிழ்நாடெங்கும் நேற்று காலை நடைபெற்றது.

இதில் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னணியினர் தோழமைக் கட்சியினர் திரளாகப் பங்கேற்றனர்.

## முதல்வர் மு.க. ஸ்டாலின் இங்கு வந்த நாள்

# எங்களுக்கு முக்கியமான நாள்!

## மீனவ சமூகத் தலைவர்கள் நெகிழ்ச்சி!

18.8.2023 அன்று இராமேசுவரத்தில் நடைபெற்ற மீனவர் மாநாட்டில், முதல்வர் மு.க.ஸ்டாலின், மீனவ சமுதாயத்தினரின் நலனுக்கும் மேம்பாட்டுக்கும்,ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

**அது குறித்து மீனவர் சங்கங்களின் தலைவர்கள், முதல்வரின் வருகையும் அறிவிப்புகளும் தமக்கு மிகப் பெரிய வெற்றி என்றும்; மீனவர் வாழ்வாதாரப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு முதல்வர் தீர்வு கண்டுள்ளார் என்றும்; எங்களைத் தேடி முதல்வர் வந்த நாள், மீனவ சமுதாயத்தினர்க்கு மிக முக்கியமான நாள் என்றும் மகிழ்ச்சியும் பூரிப்பும் தெரிவித்துள்ளனர் என்று ‘தி இந்து’ நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.**

“ The fishermen leaders in Thangachimadam, Mandapam and Rameswaram said the package was a big bonanza.” Our livelyhood issues have been addressed. Today is a very important day for all of us” they said. (The Hindu ).



திருச்சி மத்திய, வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முதன்மை செயலாளரும், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு வழிகாட்டுதலின்படி திருச்சி ரயில்வே ஜங்சன் எதிரில் காதிகிராப்ட் அலுவலகம் முன்பு மத்திய, வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி, மாணவர் அணி, மருத்துவ அணிகளின் சார்பில் நீட் தேர்வினை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய அரசையும், மாநில ஆளுநரையும் கண்டித்து மாபெரும் உண்ணாவிரத அறப்போரட்டம் நடைபெற்றது. இந்த அறப்போராட்டத்தில் திருச்சி சிவா எம்.பி., மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்ட செயலாளர் தியாகராஜன் மாநகர செயலாளர் அன்பழகன் , கிழக்கு மாநகர செயலாளர் மதிவாணன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.அறப்போராட்டத்தில் எம்.எல்.ஏ.கள் ஸ்டாலின் குமார், கதிரவன் பழனியாண்டி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த் மாநில மாணவரணி துணை அமைப்பாளர் ஆனந்த், மருத்துவ அணி அமைப்பாளர் கண்ணன் மற்றும் மாத்தூர் கருப்பையா சேர்மன் துரைராஜ் கதிர்வேல் டோல்கேட் சுப்பிரமணி சிங்காரம் செவந்திலிங்கம், மாநில கண்ணன் பொறியாளர் அணி கருணாநிதி மற்றும் மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் ஆணைப்படி,கழக இளைஞர் அணி செயலாளரும்,தமிழக அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி,நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசு மற்றும் ஆளுநரைக் கண்டித்து ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்ட இளைஞரணி, மாணவர் அணி,மருத்துவ அணி சார்பாக மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நகர பி.எஸ்.என்.எல் அலுவலகம் முன்பு நடைபெற்றது. போராட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி,தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,நகர செயலாளர் நாட்டான் மாது,இளைஞர் அணி அமைப்பாளர்கள் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன்,சிவகுரு,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள் என்.பி.பெரியண்ணன்,சந்தர், மருத்துவ அணி அமைப்பாளர்கள் பெருமாள், டாக்டர்.டி.பழனிசாமி,மற்றும் முன்னாள் நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில,மாவட்ட,ஒன்றிய,பேரூர்,நகர கழக செயலாளர்கள்,வார்டு,கிளைகழகச்செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகள்,உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.